10.05 மணி [1990 சனவரி 19

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எருமைப்பாளையம் கிராமத்தில் காட்டேரி என்ற ஏரி ஒன்று இப்போது நல்ல முறையில் இருக்கிறது. அதிலே தேக்கப்படும் தண்ணீர் அதற்குரிய பாசன நிலங்களுக்குப் பயன் பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனை அணையாக மாற்ற வேண்டுமென்று சொல்கிறார். அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் Point of order கிடையாது.

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு அரசின் உதவித் தொகை.

* 2318—திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பனை ஏறும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடையும்போது, பிரேதப் பரிசோதனையின்றி அரசின் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பனை மற்றும் தென்னை மரத்திலேறி தொழில் செய்யும்போது தவறி விழுந்து அடிபட்டு மரணமடையும் தொழிலாளரின் குடும்ப வாரிசுதாரருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. அங்ஙனம் நிதியுதவி கோரும் விண்ணப்பங்களை அனுப்பும்போது, அத்துடன் இறந்தவரின் பிரேதப் பரிசோதனைச் சான்றினையும், ஏனைய சான்றுகளுடன் இணைக்க வேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது. விபத்து நிமித்தம் வழங்கப்படும் மேற்படி நிதி வழங்கலில், தவறு நேரா வண்ணம் இருப்பதற்காகவே, அரசு இதனை நிர்ணயித்துள்ளதால், இந்த விதியைத் தளர்த்துவதற்கில்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி கேரளாவிலும், ஒரு பகுதி தமிழ் நாட்டிலும் இருக்கிறது. கேரளா பகுதியைப் பொறுத்த வரையில் அங்கே தாசில்தார் உடனடியாக வந்து பார்த்து, வில்லேஜ் ஆபீசர் சர்டிபை செய்து, ஊரிலே இருக்கிற இரண்டு பெரியவர்களிடம் சான்றிதழ் வாங்கி, பிரேதப் பரிசோதனை செய்யாமல் பணம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்

1990 சனவரி 19]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம், ஆணை இருக்கிற காரணத்தால் அப்படிக் கொடுக்க முடியவில்லை. தாசில்தாரை விட லோக்கல் டாக்டர் பெரியவர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தல்ல. எனவே, கேரள மாநிலத்தில் செய்வதைப் போல தாசில்தார் உடனடியாக அவரே நேரடியாக வந்து பார்ப்பதைப் போல இங்கும் செய்வதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ..பனை, தென்னை மரங்களில் ஏறும் தொழிலாளிகள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். விபத்து ஏற்படும்போது அவர்களின் குடும்பம் பாதிக்கப்படுகிறது. பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டுமானால் நூற்றுக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது என்பதால் அதை அவர்களால் செய்ய முடிவதில்லை. அதனால் பிரேதப் பரிசோதனை செய்யாமலே அடக்கம் செய்கிறார்கள். ஆகவே இந்த ஆணையைத் தளர்த்தி கேரளாவில் செய்வதைப் போல வில்லேஜ் ஆபீசர், தாசில்தார் நேரடியாக வந்து பார்த்து, இரண்டு பெரியவர்களிடம் சான்றிதழ் வாங்கி நிதியுதவி கொடுக்கிற வழிமுறையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்று நிதி வழங்குவதில் அரசுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. அந்த நிதியைப் பெறுகிற பயனாளிகளுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. எனவே, இந்த விதியைத் தளர்த்துகிற யோசனை அரசுக்கு இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே பிரேதப் பரிசோதனை செய்யாமல் நிதியுதவி கோரி வந்த மனுக்கள் எத்தனை? பிரேதப் பரிசோதனை செய்ததற்குப் பின்னால் வந்துள்ள மனுக்கள் எத்தனை? கை, கால் முறிந்தவர்களிடமிருந்து வந்த மனுக்கள் எத்தனை? இவ்வாறு வந்துள்ள பலவித மனுக்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி வந்த மனுக்கள் எத்தனை நிலுவையில் இருக்கின்றன? எவ்வளவு பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்தப் பணம் வழங்குவதில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தைக் கருத்திற் கொண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியுதவி வழங்குவதில் காலதாமதம் கூடாது என்று ஏற்கனவே அவர்கள் உத்தரவிட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டவுடன் தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே காலதாமதம் என்பது இந்த அரசிடத்தில் இல்லை. எத்தனை பேர்களுக்குத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. அதற்கான தனி வினாவை எழுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.